**சார்பு நீதிமன்றம், ஒட்டன்சத்திரம், திண்டுக்கல் மாவட்டம்.**
**முன்னிலை : திரு.C.ஜெயப்பிரகாஷ், M.Com., M.L.,**
**சார்பு நீதிபதி, ஒட்டன்சத்திரம்**
**2026–ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 11ஆம் நாள் செவ்வாய்கிழமை**
**2057 திருவள்ளுவராண்டு பராபவ வருடம் ஆடி மாதம் 25ஆம் நாள்**
**E.A.No.04/2026 in E.P.No.20/2023**
**in**
**O.S. No.360/2022**
(CNR.No.TNDG190001282023)

K.நாட்ராயன் .... மனுதாரர்/ எதிர்மனுதாரர்/ பிரதிவாதி

/எதிர்/

1. K.செல்வராஜ் .... 1ம் எதிர்மனுதாரர்/ மனுதாரர்/ வாதி

2. ஆதித்யா வர்மா .... 2ம் எதிர்மனுதாரர்/ ஏலம் எடுத்தவர்

இந்த மனுவானது கடந்த 10.03.2026ம் தேதி தாக்கல் செய்யப்பட்டு, அன்றே கோப்பிற்கு எடுக்கப்பட்டு, கடந்த 06.08.2026ஆம் தேதி இறுதியாக விசாரணைக்கு வந்தபோது, மனுதாரர்/எதிர்மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் வழக்குரைஞர் திரு.R.முருகானந்தம் அவர்கள் முன்னிலையாகியும், 1ம் எதிர்மனுதாரர்/மனுதாரர்/வாதி தரப்பில் வழக்குரைஞர் திரு.K.C.ஜெகநாதன் அவர்கள் முன்னிலையாகியும், 2ம் எதிர்மனுதாரர்/ஏலம் எடுத்தவர் தரப்பில் வழக்குரைஞர் திரு.A.பூர்ணச்சந்திரன் அவர்கள் முன்னிலையாகியும், மனு, எதிர்மனுஉரை, வழக்கு கோப்புகளை பரிசீலனை செய்தும், இரு தரப்பு வாதுரைகள் கேட்கப்பட்டும், நாளது வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து வந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

**<u>உத்தரவு</u>**

1. Calculation Memo விபரப்படி மனுதாரர்/பிரதிவாதி வைப்பீடு செய்யும் தொகையை ஏற்றுக்கொண்டு கடந்த 21.01.2026ம் தேதி தாவா நிறைவேற்றுதல் மனு சொத்து ஏலம் விடப்பட்டுள்ளதை ரத்து செய்து உத்தரவிட வேண்டி உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை 21 விதி 89 மற்றும் பிரிவு 151ன் கீழ் மனுதாரர் இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2. மனு பிரமாண பத்திரிகையின் சுருக்கம் :**

இம்மனுவில் மனுதாரர் E.P.No.20/2023 மனுவில் எதிர்மனுதாரர். அசல் வழக்கில் பிரதிவாதி. 1ம் எதிர்மனுதாரர்/மனுதாரர்/வாதி அசல் வழக்கான அ.வ.எண்.360/2022 வழக்கில் கடந்த 08.12.2022ம் தேதியில் ஏற்பட்டுள்ள தீர்ப்பாணையை நிறைவேற்ற தாவா நிறைவேற்றுதல் மனு சொத்தை ஜப்தி செய்து, ஏலம் விடுவதன் வழியாக அ.வ.எண்.360/2022 வழக்கின் தீர்ப்பாணை தொகையை வசூல் செய்ய தாவா நிறைவேற்றுதல் மனு தாக்கல் செய்துள்ளார். தாவா நிறைவேற்றுதல் மனுவில் கடந்த 30.10.2023ம் தேதியில் பிறப்பிக்கப்பட்ட ஜப்தி உத்தரவுபடி கடந்த 06.12.2023ம் தேதி நிறைவேற்றுதல் மனு சொத்து ஜப்தி செய்யப்பட்டுள்ளது. ஜப்தி செய்த பின் தாவா நிறைவேற்றுதல் மனு சொத்து இந்நீதிமன்ற ஏலத்தில் கடந்த 21.01.2026ம் தேதியில் ஏலம் விடப்பட்டு, மனு சொத்தை 2ம் எதிர்மனுதாரர் நீதிமன்ற ஏலத்தில் எடுத்துள்ளார். இந்நிலையில், தாவா நிறைவேற்றுதல் மனு தொகை மற்றும் நாளது தேதி வரையிலான வட்டியினையும் சேர்த்தும் மற்றும் ஏலம் எடுத்தவருக்கு ஏலத்தொகைக்கு 5 சதவீத பவுண்டேஜ் தொகையும் வைப்பீடு செய்ய தயாராக உள்ளார். வைப்பீடு செய்வது சம்பந்தமாக Calculation memo தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மனுதாரர்/பிரதிவாதி வைப்பீடு செய்யும் தொகையை ஏற்றுக்கொண்டு கடந்த 21.10.2026ம் தேதியில் தாவா நிறைவேற்றுதல் மனு சொத்து ஏலம் விடப்பட்டுள்ளதை ரத்து செய்து உத்தரவு பிறப்பிக்க வேண்டியது அவசியமாக உள்ளது. இல்லாது போனால் மனுதாரருக்கு ஈடு செய்ய முடியாத கஷ்டமும், நஷ்டமும் ஏற்பட்டுவிடும், எனவே, Calculation Memo விபரப்படி மனுதாரர்/பிரதிவாதி வைப்பீடு செய்யும் தொகையை ஏற்றுக்கொண்டு கடந்த 21.01.2026ம் தேதி தாவா நிறைவேற்றுதல் மனு சொத்து ஏலம் விடப்படடுள்ளதை ரத்து செய்து உத்தரவிட வேண்டி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**3. 2ம் எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டு 1ம் எதிர்மனுதாரரால் ஏற்றுக்கொள்ளப்பட்ட எதிர்உரை சுருக்கம் :**

இம்மனுவில் 2ம் எதிர்மனுதாரர் ஏலம் எடுத்தவர் ஆவார். அசல் வழக்கானது இந்த மனுவின் 1ம் எதிர்மனுதாரர்/மனுதாரர்/வாதி, மனுதாரர்/ எதிர்மனுதாரர்/ பிரதிவாதி மீது கடந்த 23.06.2015ம் தேதி தாவா புரோநோட்டு வழக்கு

தாக்கல் செய்து கடந்த 08.12.2022ம் தேதியன்று இந்த மனுவின் 1ம் எதிர்மனுதாரர்/ மனுதாரர்/வாதி தாக்கல் செய்த தாவா வழக்கினை நீதிமன்றத்தால் அனுமதித்து உத்தரவு அளிக்கப்பட்டுள்ளது. மேலும் தாவா அசல் வழக்கில் இ.ம.எண்.360/2022ன் படி தாவா மனு சொத்தினை ஏலம் விடுவதன் வழியாக தீர்ப்பாணை தொகையை வசூலிப்பதற்கு உத்தரவு பெற்று, தீர்ப்பினை நிறைவேற்றும் பொருட்டு மனுவின் 1ம்எதிர்மனுதாரர் / மனுதாரர் /வாதி, மனுதாரர் / எதிர்மனுதாரர் / பிரதிவாதி மீது இந்நீதிமன்றத்தில் கடந்த 06.03.2023ம் தேதியில் தாவா நிறைவேற்றுதல் மனு தாக்கல் செய்து கடந்த 30.10.2023ம் தேதியில் பிறப்பிக்கப்பட்ட ஜப்தி உத்தரவின்படி கடந்த 06.12.2023ம் தேதியன்று மனு சொத்து ஜப்தி செய்யப்பட்டுள்ளது. ஜப்தி செய்த பின்னர் தாவா நிறைவேற்றுதல் மனு சொத்து கடந்த 21.01.2026ம் தேதி ஏலம் விடப்பட்டுள்ளது. மேற்படி ஏலத்தில் மனு சொத்தினை 2ம் எதிர்மனுதாரர் ரூ.5,03,000/-க்கு ஏலம் எடுக்கப்பட்டு அன்றைய தினமே நான்கில் ஒரு பங்கு தொகையான ரூ.1,25,750/-தொகை வைப்பீடு செய்யப்பட்டுள்ளது. பாக்கி ஏலத்தொகையான ரூ.3,77,250/- தொகை கடந்த 28.01.2026ம் தேதி நீதிமன்ற வங்கி கணக்கிற்கு வைப்பீடு செய்யப்பட்டு, வங்கியில் வழங்கப்பட்ட ரசீது குறிப்பாணையுடன் கடந்த 29.01.2026ம்தேதி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. நிறைவேற்றுதல் மனுவில் எதிர்மனுதாரர் அவரது தரப்பு விசாரணைக்காக ஆஜராகாமல் தாவா சொத்தின் ஏல விபரங்கள் அனைத்து நன்கு அறிந்தும் வேண்டுமென்றே அதற்கான நடவடிக்கைகள் எடுக்காமல் நீதிமன்றத்தின் வழியாக ஏலம் விடப்பட்டு இம்மனுவில் 2ம் எதிர்மனுதாரர் / ஏலம் எடுத்தவர் தரப்பில் ஏலம் எடுக்கப்பட்டுள்ளது. நீதிமன்ற உத்தரவினை தடை செய்யும் நோக்கிலும், காலதாமதப்படுத்தும் நோக்கிலும் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளதால், மனுவினை எதிர்மனுதாரர்களின் செலவு தொகையுடன் தள்ளுபடிசெய்ய வேண்டும் என எதிர்மனுஉரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**4.** இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில் இம்மனு அனுமதிக்கத்தக்கதா? என்பதேயாகும்.

**5. பிரச்சனைக்கான தீர்வு :**

**5.1.** 1ம் எதிர்மனுதாரர்/மனுதாரர்/வாதி, கடனுறுதிசீட்டின் பேரிலான கடனை வசூல் செய்ய வேண்டி மனுதாரர்/எதிர்மனுதாரர்/பிரதிவாதிக்கு அசல் வழக்கு

எண்.360/2022 என்ற வழக்கு தாக்கல் செய்து, அதில் கடந்த 08.12.2022ம் தேதி பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பாணையின்பேரில், நிறைவேற்று மனுவில் கண்ட சொத்தினை ஏலத்திற்கு கொண்டு வந்து தீர்ப்பாணையில் கண்ட தொகையை வசூல் செய்து கொடுக்க வேண்டி அசல் நிறைவேற்று மனு தாக்கல் செய்யப்பட்டு, நிறைவேற்று மனு எண்.20/2023 மனுவில் கண்ட சொத்துக்கள் கடந்த 30.10.2023ம் தேதி பற்றுகை செய்ய உத்தரவிடப்பட்டு, 30.11.2023ம் தேதி நிறைவேற்று மனு சொத்துக்கள் பற்றுகை செய்யப்பட்டு, மனு சொத்துக்கள் கடந்த 21.01.2026ம் தேதி ஏலம் விடப்பட்டு, 2ம் எதிர்மனுதாரரால் ஏலத்திற்கு எடுக்கப்பட்டு, தாவா மனு தொகை மற்றும் நாளது வரையிலான வட்டி தொகையை சேர்த்து ஏலம் எடுத்தவருக்கு ஏலத்தொகைக்கு 5 சதவீதம் வைப்பீடு செய்ய தயாராக உள்ளதாகவும், வைப்பீடு தொகை சம்பந்தமாக Calculation Memo தாக்கல் செய்துள்ளதாகவும், மேற்படி தொகையை ஏற்றுக்கொண்டு தாவா நிறைவேற்று மனு சொத்து ஏலம் விடப்பட்டுள்ளதை ரத்து செய்து உத்தவிட வேண்டும் என்று மனுதாரர் தரப்பு மனுவானது முன்னெடுத்துச்செல்லப்பட்டுள்ளது.

**5.2.** அசல் நிறைவேற்று வழக்கு கோப்பினை பரிசீலிக்கையில், 1ம் எதிர்மனுதாரர்/வாதி, கடனுறுதிசீட்டின் பேரிலான கடனை திரும்பி செலுத்த மனுதாரர்/பிரதிவாதிக்கு எதிராக அசல் வழக்கு எண்.360/2022 என்ற வழக்கு தாக்கல் செய்து, மேற்படி வழக்கில் கடந்த 08.12.2022ம் தேதி தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. மனுதாரர்/பிரதிவாதி, தீர்ப்பாணைக்கு பின்னிட்டும், தீர்ப்பாணையில் கண்ட தொகையை திரும்பி செலுத்தாததால், தீர்ப்பாணையில் கண்ட தொகையை வசூல் செய்து கொடுக்க வேண்டி நிறைவேற்று மனு எண்.20/2023 என்ற மனு தாக்கல் செய்யப்பட்டு, மேற்படி மனுவில் கண்ட சொத்துக்கள் கடந்த 30.10.2023ம் தேதி பற்றுகை செய்ய உத்தரவிடப்பட்டு, கடந்த 30.11.2023ம் தேதி நிறைவேற்று மனு சொத்துக்கள் பற்றுகை செய்யப்பட்டு, மனு சொத்துக்கள் கடந்த 21.01.2026ம் தேதி ஏலம் விடப்பட்டு, 2ம் எதிர்மனுதாரரால் ரூ.5,03,000/− தொகைக்கு ஏலத்திற்கு எடுக்கப்பட்டு, அன்றைய தினமே 1/4 பங்கு தொகையான ரூ.1,25,750/− தொகையும் பின்னிட்டு, பாக்கி ஏலத்தொகையான ரூ.3,77,250/− தொகையும் 2ம் எதிர்மனுதாரரால் 28.01.2026ம் தேதி இந்நீதிமன்றத்தில் வைப்பீடு செய்யப்பட்டுள்ளதாக கடந்த 29.01.2026ம் தேதி 2ம் எதிர்மனுதாரர்/ஏலதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டு,

ஏலம் உறுதி செய்யப்பட்டுள்ளது. மேற்படி ஏலத்தொகை ரூ.5,03,000/– தொகைக்கு Sale Certificate Charge ரூ.15,090/– தொகையை இந்நீதிமன்றத்தில் வைப்பீடு செய்ய அனுமதி வேண்டி இ.ம.எண்.05/2026 என்ற எண்ணில் தாக்கல் செய்யப்பட்ட மனுவானது கடந்த 06.07.2026ம் தேதி அனுமதிக்கப்பட்டதன் அடிப்படையில், Sale Certificate Charge ரூ.15,090/– தொகை இந்நீதிமன்றத்தில் வைப்பீடு செய்யப்பட்டுள்ளது.

**5.3.** நிறைவேற்று மனுவில் குறிப்பிட்டுள்ள ஏலத் தொகைக்கு 5% வீதம் கமிசன் தொகையையும் செலுத்துவதற்கு தயாராக உள்ளதாகவும், மனுவுடன் தாக்கல் செய்துள்ள லாஜ்மெண்ட் செட்டியூலை ஏற்றுக் கொண்டு, அதில் குறிப்பிட்டுள்ள தொகையை ஏற்றுக் கொண்டு 21.10.2026–ஆம் தேதிய ஏலத்தை ரத்து செய்து, நிறைவேற்று மனுவில் குறிப்பிட்டுள்ள சொத்தின் மீதான பற்றுகை உத்தரவை நீக்கி உத்தரவிடவேண்டும் என்று மனுதாரர் தரப்பு மனுவானது முன்னெடுத்துச் செல்லப்பட்டுள்ள நிலையில், எதிர்மனுதாரர்கள் தரப்பில் நிறைவேற்று மனு சொத்துக்களானது 2ம் எதிர்மனுதாரரால் ரூ.5,03,000/– தொகைக்கு ஏலத்திற்கு எடுக்கப்பட்டு, மேற்படி ஏலத்தொகையில் 1/4 பங்கு தொகை ரூ.1,25,750/– தொகையும், பாக்கி ஏலத்தொகை ரூ.3,77,250/– தொகையும் நீதிமன்றத்தில் வைப்பீடு செய்யப்பட்டுள்ளதாகவும், நீதிமன்ற உத்தரவினை தடை செய்யும் நோக்கத்திலும், காலதாமதத்தப்படுத்தும் நோக்கத்திலும் இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளதால் மனுவை தள்ளுபடி செய்ய வேண்டும் என எதிர்மனுதாரர்கள் தரப்பில் எதிர்மனுஉரையில் சொல்லியுள்ள நிலையில், அசல் நிறைவேற்று மனுவில் குறிப்பிட்டுள்ள தொகை மற்றும் தீர்ப்பாணையின்படியான வட்டி ஆகியவற்றை கணக்கிட்டு நிறைவேற்று மனு தொகையும், நிறைவேற்று மனுவில் குறிப்பிட்டுள்ள ஏலத் தொகை ரூ.5,03,000/– தொகையும் மனுதாரர் தரப்பில் நீதிமன்றத்தில் வைப்பீடு செய்யப்பட்டுள்ளது என்பதும், தீர்ப்பாணையில் குறிப்பிட்டுள்ளபடி பின்வட்டி, ஏலத் தொகைக்குண்டான 5% சதவீதம் தொகை மற்றும் Sale Certificate Charge தொகை ஆகியவைகளை மனுதாரர் நீதிமன்றத்தில் வைப்பீடு செய்துள்ளார் என்பதும், மனுதாரர் தரப்பில் நீதிமன்ற ஏலத்தை ரத்து செய்ய உரிய கால வரம்பிற்குள் நிறைவேற்று நீதிமன்றத்தில் மனு செய்து தொகைகளும் வைப்பீடு செய்யப்பட்டுள்ளது என்பது இந்நீதிமன்றத்தால் அறிய முடிகிறது. எனவே, மனுதாரர்/பிரதிவாதி நீதிமன்றத்தில்

வைப்பீடு செய்துள்ள தொகையை ஏற்றுக்கொண்டு கடந்த 21.01.2026ம் தேதி தாவா நிறைவேற்றுதல் மனு சொத்து ஏலம் விடப்பட்டுள்ளதை ரத்து செய்து உத்தரவிடுவதே நீதியின் நலனுக்கு உகந்ததாக இருக்கும் என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கின்றது. மனுவின் தன்மையை கருத்தில் கொண்டு செலவு தொகை பற்றிய உத்தரவு எதுவும் பிறப்பிக்கவில்லை.

6. முடிவில்,

**1. இந்த மனு செலவு தொகையின்றி அனுமதித்து உத்தரவிடப்படுகிறது.**

**2. அசல் நிறைவேற்று மனுவில் கண்ட சொத்தை பொறுத்து 21.01.2026ம் தேதி நடைபெற்ற ஏலத்தை ரத்து செய்து உத்தரவிடப்படுகிறது. செலவு தொகை இல்லை.**

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து–தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, நீதிமன்ற கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு, இன்று 2026–ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 11ஆம் நாள் என்னால் இந்நீதிமன்ற அவையில் பகரப்பட்டது.

C JAYAPPRAKASH
Digitally signed by C JAYAPPRAKASH
Date: 2026.08.11 19:12:15 +0530

**சார்பு நீதிபதி,**
**ஒட்டன்சத்திரம்.**

**மனுதாரர் தரப்பு சாட்சியங்கள், சான்றாவணங்கள் – இல்லை**

**எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சியங்கள், சான்றாவணங்கள் – இல்லை**

C JAYAPPRAKASH
Digitally signed by C JAYAPPRAKASH
Date: 2026.08.11 19:12:21 +0530

**சார்பு நீதிபதி,**
**ஒட்டன்சத்திரம்.**

**சார்பு நீதிமன்றம், ஒட்டன்சத்திரம், திண்டுக்கல் மாவட்டம்.**
**முன்னிலை : திரு.C.ஜெயப்பிரகாஷ், M.Com., M.L.,**
**சார்பு நீதிபதி, ஒட்டன்சத்திரம்**
**2026–ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 11ஆம் நாள் செவ்வாய்கிழமை**
**2057 திருவள்ளுவராண்டு பராபவ வருடம் ஆடி மாதம் 25ஆம் நாள்**
**E.A.No.04/2026 in E.P.No.20/2023**
**in**
**O.S. No.360/2022**
(CNR.No.TNDG190001282023)

திண்டுக்கல் மாவட்டம், ஒட்டன்சத்திரம் வட்டம், ரெட்டியபட்டி கிராமம், சின்னக்கரட்டுப்பட்டியில் வசித்து வந்து தற்சமயம் திருப்பூர் மாவட்டம், திருப்பூர் நகர், நெரிபெரிச்சல், அவினாசி நகர் அருகில் பிரீமியர் என்க்ளேவ் 1வது தெரு, க.எண்.640/32Cல் வசிக்கும் சின்னகாளியப்பன் மகன் இந்து சுமார் 46 வயதுள்ள K.நாட்ராயன் .... மனுதாரர்/ எதிர்மனுதாரர்/ பிரதிவாதி

/எதிர்/

1. திண்டுக்கல் மாவட்டம், ஒட்டன்சத்திரம் வட்டம், ரெட்டியபட்டி கிராமம், சின்னக்கரட்டுப்பட்டியில் வசிக்கும் காளிமுத்து அவர்களின் மகன் இந்து சுமார் 55 வயதுள்ள K.செல்வராஜ் .... 1ம் எதிர்மனுதாரர்/ மனுதாரர்/ வாதி

2. திண்டுக்கல் மாவட்டம், ஒட்டன்சத்திரம் வட்டம், ரெட்டியபட்டி கிராமம், சின்னக்கரட்டுப்பட்டி, தெற்கு தெரு கதவு எண்.2/191–ல் வசிக்கும் சண்முகம் மகன் இந்து சுமார் 41 வயதுள்ள ஆதித்யா வர்மா .... 2ம் எதிர்மனுதாரர்/ஏலம் எடுத்தவர்

Calculation Memo விபரப்படி மனுதாரர்/பிரதிவாதி வைப்பீடு செய்யும் தொகையை ஏற்றுக்கொண்டு கடந்த 21.01.2026ம் தேதி தாவா நிறைவேற்றுதல் மனு சொத்து ஏலம் விடப்பட்டுள்ளதை ரத்து செய்து உத்தரவிட வேண்டி உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை 21 விதி 89 மற்றும் பிரிவு 151ன் கீழ் மனுதாரர் இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**மனு தாக்கல் செய்யப்பட்ட நாள் : 10.03.2026**

## உத்தரவாணை

இந்த மனுவானது கடந்த 10.03.2026ம் தேதி தாக்கல் செய்யப்பட்டு, அன்றே கோப்பிற்கு எடுக்கப்பட்டு, கடந்த 06.08.2026ஆம் தேதி இறுதியாக விசாரணைக்கு வந்தபோது, மனுதாரர்/எதிர்மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் வழக்குரைஞர் திரு.R.முருகானந்தம் அவர்கள் முன்னிலையாகியும், 1ம் எதிர்மனுதாரர்/மனுதாரர்/வாதி தரப்பில் வழக்குரைஞர் திரு.K.C.ஜெகநாதன் அவர்கள் முன்னிலையாகியும், 2ம் எதிர்மனுதாரர்/ஏலம் எடுத்தவர் தரப்பில் வழக்குரைஞர் திரு.A.பூர்ணச்சந்திரன் அவர்கள் முன்னிலையாகியும், மனு, எதிர்மனுஉரை, வழக்கு கோப்புகளை பரிசீலனை செய்தும், இரு தரப்பு வாதுரைகள் கேட்கப்பட்டும், நாளது வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து வந்து இன்று இந்நீதிமன்றம் பின்வரும் உத்தரவாணையை வழங்குகிறது.

1. இந்த மனு அனுமதித்து உத்தரவிடப்படுகிறது.
2. அசல் நிறைவேற்று மனுவில் கண்ட சொத்தை பொறுத்து 21.01.2026ம் தேதி நடைபெற்ற ஏலத்தை ரத்து செய்து உத்தரவிடப்படுகிறது.
3. செலவு தொகை இல்லை.

## சொத்து விபரம்

திண்டுக்கல் மாவட்டம், ஒட்டன்சத்திரம் வட்டம், சத்திரப்பட்டி சார்பதிவகம், வீரலப்பட்டி கிராமம் பட்டா எண்.388, சர்வே எண்.153/5யு ஹெக்டேர் 0.26.0 உள்ள புஞ்சை நிலமும், அதற்கேற்பட்ட சகல மாமூல் பாத்தியங்களும் யாவும் சேர்ந்து.

**செலவுபட்டியல்**

| | மனுதாரர் ரூ. | எதிர்மனுதாரர் ரூ. |
|---|---|---|
| மனுவின் மீதான ஸ்டாம்ப் | ரூ.20.00 | |
| வக்காலத்திற்கான ஸ்டாம்ப் | ரூ.10.00 | |
| | செலவுபட்டியல் தாக்கல் இல்லை | |
| மொத்தம் | 30.00 | |

2026–ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 11ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு, இந்நீதிமன்ற முத்திரையுடன் வழங்கப்பட்டது.

C JAYAPPRAKASH Digitally signed by C JAYAPPRAKASH Date: 2026.08.11 19:12:38 +0530

**சார்பு நீதிபதி,**
**ஒட்டன்சத்திரம்.**